செய்தி வெளியீடு 31 நாள். 12.01.2017

**மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பருவக்காலங்களில் ஏற்படும் காய்ச்சலை கட்டுப்படுத்த பன்முக நடவடிக்கைகள்!**

**பொது மக்கள் பதற்றமோ பீதியோ அடையத்தேவையில்லை!!**

~~~~~

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பருவக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. பன்றிக்காய்ச்சல் பருவக்காலங்களில் ஏற்படும் ஒரு விதமான காய்ச்சல் ஆகும், அதனால் மக்கள் பதற்றமோ, பீதியோ அடையத்தேவையில்லை என்று திருவள்ளூர் மாவட்டத்தில் புதுகும்மிடிபூண்டியில் 12.01.2017 இன்று நடைபெற்ற ஆய்விற்கு பிறகு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வகையில் மாவட்டம் தோறும் மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து, ரயில் நிலையங்கள், வழிபாட்டுத்தளங்கள், சந்தைகள், அனைத்து மருத்துவக் கல்லூரிகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் போதிய அளவு மருந்து, மாத்திரைகள், தடுப்பூசிகள், பாதுகாப்பு கவசங்கள் (Personal Protective Gears) இருப்பில் உள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

காய்ச்சல், சளி மற்றும் தொண்டை வலி போன்ற அறிகுறிகளுடன் உள்ள நபர்கள் தாங்களாகவே மருந்துகளை எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனையையோ அல்லது உரிய மருத்துவரையோ அனுகி முறையான சிகிச்சை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினார். மேலும் தனியார் மருத்துவர்கள் பன்றிக்காய்ச்சல் நோய் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு சிகிச்சை வழங்கும்போது அரசு வழிகாட்டுதலில் (Protocol) தெரிவித்துள்ளவாறு மட்டுமே பரிசோதனை மற்றும் சிகிச்சை மேற்கொள்ளபடவேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

பன்றிக்காய்ச்சல் நோய் பரவுவதை தவிர்க்க தும்பும்போதும் மற்றும் இரும்பும்போதும் மூக்கு மற்றும் வாயினை துணியைக் கொண்டு மூடுதல், கைகளை சுத்தமாக சோப்பு போட்டு நன்கு கழுவுதல் போன்ற சுகாதாரமான பழக்க வழக்கங்களை கடைபிடிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மாவின் அரசு பன்றிக்காய்ச்சல் நோய் கட்டுப்படுத்த தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகிறது. இது ஒரு குணப்படுத்தக் கூடிய காய்ச்சல் தான் எனவே பொது மக்கள் யாரும் பன்றிக்காய்ச்சல் குறித்து பீதியோ பதற்றமோஅடைய தேவையில்லை. பொது மக்கள் காய்ச்சல் குறித்து 24 மணிநேரமும் மருத்துவ ஆலோசனைகள் பெறும் வகையில் தகவல் மையம் (தொலைப்பேசி எண் 044 - 24350496, 24334811, 9444340496, 9361482899) ஏற்படுத்தப்பட்டுள்ளது மேலும் தகவல்கள் பெற “104” சேவையையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., திருவள்ளுவர் மாவட்ட ஆட்சியர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ்.விஜயகுமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர் க.குழந்தைசாமி, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் டாக்டர் ஜெ.பிரபாகரன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~